Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

# நாவு

மெதுவான பிரத்யுத்தரம் உக்கிரத்தை மாற்றும்;
கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.
– நீதிமொழிகள் 15:1

பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு;
ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்.
– நீதிமொழிகள் 12:18

சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது;
தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான்.
– நீதிமொழிகள் 10:19

துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது.
என் சகோதரனே அப்படியிருக்கலாகாது.
– யாக்கோபு 3:10



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# இனி எக்காளம்

VOL . 5 ISSUE . 3
தனிப்பிரதி ரூ 20/= அக்டோபர் 2011





# நாவு

**சு**யாதீனப் பிரமாணத்தின்படி நாவின் அதிகாரத்தை, கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் எதை வேண்டுமானாலும் பேசலாம், பேசாமலும் இருக்கலாம். அது நம்மைப் பொறுத்ததுதான்.

**சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது; தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான்** (*நீதிமொழிகள் 10:19*). நாம் நாவை எப்படியாகப் பயன்படுத்துகிறோம்? நாம் பேசும் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேச வேண்டும். முக்கியமான காரியமாய் இருந்தால் மட்டும் பேச வேண்டும். இல்லையென்றால் பேசக் கூடாது. நாம் பேசும் வார்த்தைகள் மற்றவர்களை கட்டிஎழுப்பக்கூடியதாய், பலப்படுத்துவதாய், உற்சாகப்படுத்துவதாய், ஆறுதல்படுத்துவதாய் இருக்க வேண்டும். நாம் பேசும் சில வார்த்தைகள் அநேகருக்கு பாதிப்பை உண்டாக்குகிறது.

சிலர் வாயை திறந்தாலே எதையாவது பேசிக்கொண்டிருப்பார்கள். **..உதடுகளின் பேச்சோ வறுமையைமாத்திரம் தரும்** (*நீதிமொழிகள் 14:23*). சிலர் யாரிடம் என்ன பேச வேண்டும் என்பதை அறியாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் பேசும் வார்த்தைகள், சுற்றியிருப்பவர்களின் மனதைவேதனைப்படுத்துகிறதா என்பதைக்கூட யோசிக்க மாட்டார்கள்.

**..கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்** (*யாக்கோபு 1:19*). சிலர், மற்றவர்கள் அவர்களிடம் பேசுவதை கேட்க மாட்டார்கள். அவர்கள் பேசுவதை பொருட்படுத்தாமல், என்ன பேசுகிறார்கள், எதைப்பற்றிப் பேசுகிறார்கள், எதற்காகப் பேசுகிறார்கள், ஏன் பேசுகிறார்கள் என்பதையெல்லாம் யோசிக்காமல், இவர்களுக்கு தோன்றினதை பேசிக் கொண்டிருப்பார்கள்.

இவர்களோடு யாராலும் சம்பாஷிக்க முடியாது. இவர்கள் பேசுவதைத்தான் மற்றவர்கள் கேட்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தோடு இருப்பார்கள். எதையும், யாரோடும் கலந்து ஆலோசிக்க மாட்டார்கள். இவர்களுடைய நாவு ஓய்வில்லாது பேசிக்கொண்டே இருக்கும். இவர்களுடைய நாவும், பேச்சும், இலக்கு இல்லாது எய்யப்பட்ட அம்புபோல இருக்கும். சிலர் எப்பொழுதும் மற்றவர்களைப்பற்றி பேசிக்கொண்டே இருப்பார்கள். மற்றவர்களை குறை சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள், தாங்கள் செய்யும் தவறுகளையும், குறைகளையும் பேச மாட்டார்கள். மற்றவர்களுடைய குறைகளை கண்டுபிடித்து அதையே பெரிதாக பேசுவார்கள். இன்னும் சிலர் தீமையான காரியங்களை செய்வதற்கு இரகசியமாகப் பேசி திட்டம் போடுவார்கள். சிலர் வாயைத் திறந்தாலே பொய் பேசுவார்கள். ஒருவர் பேசும் வார்த்தைகளை வைத்தே அவர்கள் நல்ல குணங்களை உடையவர்களா அல்லது தீய குணங்களை உடையவர்களா என்பதை அறிந்து கொள்ளலாம். நாம் ஞானமாய் பேச நமக்கு சுயக் கட்டுப்பாடு அவசியம்.

**பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்** (*நீதிமொழிகள் 12:18*). சிலர் மற்றவர்களை எப்பொழுதும் குத்தி குத்தி பேசுவார்கள். எந்த நபரை காயப்படுத்த வேண்டுமோ அவர்களிடம் நேரிடையாகப் பேசாமல், அவர்கள் முன்னிலையில் இன்னொரு நபரிடம் பேசுவதுபோலப் பேசி, குறிப்பிட்ட அந்த நபரின் மனதை காயப்படுத்துவார்கள். மனுஷன் எதை விதைத்தானோ அதையே அறுப்பான் என்ற வேத வார்த்தையின்படி, இவர்கள் இன்னொரு நபரால் காயப்படுத்தப்படுவார்கள். ஞானமுள்ளவன் தான் பேசும் வார்த்தைகளில் கவனமாக, எச்சரிக்கையாக இருப்பான். கவனமில்லாமல் எந்த வார்த்தையையும் பேசிவிடக்கூடாது. நம்மை இன்னொரு நபர் இப்படியாக பேசினால் நம் உள்ளம் எவ்வளவு வேதனைப்படும் என்று யோசித்து பார்க்க வேண்டும். அப்படி யோசித்திருந்தால் இப்படியாக மற்றவர்களை பேசமாட்டார்கள்.

**மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்** (*நீதிமொழிகள் 15:1*). சிலர் கோபத்தில் கடுமையான வார்த்தைகளைப் பேசி, குடும்ப சமாதானத்தையே கெடுத்து விடுவார்கள். உரத்த குரலில் பேசப்படும் கண்டிப்பான, இரக்கமற்ற வார்த்தைகள், கோபத்தை தூண்டிவிடுகிறது. மனதை காயப்படுத்தும்படியாகபேசின வார்த்தைகளினிமித்தம் பிரிந்த குடும்பங்கள் ஏராளம். நாம் சமாதானமாகப் பதில் பேசும்போது கோபம் மறைந்து போகும்.

சில மாமியார்கள், தங்கள் மருமகள்கள் செய்யும் சிறு சிறு குறைகளை மிகவும் பெரிதாக பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால், தனது மகள், அவளது கணவன் வீட்டில் செய்யும் தவறுகளையும், குறைகளையும் கண்டும் காணாததுபோல இருப்பார்கள். தங்கள் கண்ணிலுள்ள உத்திரத்தைப் பார்க்காமல் பிறர் கண்ணிலுள்ள துரும்பைப் பார்த்து மிகைப்படுத்தி பேசுவார்கள்.

**புறங்கூறித் திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான்; ஆவியில் உண்மையுள்ளவனோ காரியத்தை அடக்குகிறான்** (*நீதிமொழிகள் 11:13*). சிலர் எப்பொழுதும் ஒருவரைப் பற்றி மற்றவர்களிடத்திலும், ஒரு குடும்பத்தின் காரியங்களை மற்றொருவரிடத்திலும் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். அதில் சுவாரஸ்யமாக இருப்பார்கள். மற்ற குடும்பங்களின் இரகசியங்களை அறிந்து, அதை மற்றொருவரிடத்தில் அம்பலப் படுத்துவதில் ஆர்வமாயிருப்பார்கள். அவர்களது பேச்சு முழுவதுமே மற்றவர்களின் இரகசியங்களைப்பற்றித் தான் இருக்கும். இவர்கள் மற்றவர்களிடத்திலே அன்புகூராததினாலேயே இப்படியாக பேசுகிறார்கள். ஒருவரை உண்மையாக நேசிப்பவர்கள் மற்ற குடும்பங்களின் இரகசியங்களை ஒருபோதும் மற்றவர்களிடத்திலே வெளிப்படுத்தமாட்டார்கள்.

**மதிகெட்டவன் பிறனை அவமதிக்கிறான்; புத்திமானோ தன் வாயை அடக்கிக் கொண்டிருக்கிறான்** (*நீதிமொழிகள் 11:12*). மற்றவர்களை உண்மையாய் நேசிக்கும்

போது, அவர்களிடத்திலே காணப்படும் குறைகளை அவர்கள் தனியாய் இருக்கும்போது, அவர்களுடைய மனது புண்படாதபடி, பக்குவமாக எடுத்துச் சொல்லவேண்டும். மற்றவர்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு நடப்பதே ஞானமாய் நடப்பதாகும். மற்றவர்களின் மனதை புண்படுத்த வேண்டும் என்பதற்காக பேசக் கூடாது. மற்றவர்களை அவமதித்தோ, மதிப்புக் குறைவாகவோ பேசக் கூடாது. அது அறிவில்லாமல் பேசுவதாகும். மற்றவர்களின் மனதின் காயங்களை ஆற்றும்படியாக பேசுவது ஞானமான காரியமாகும். நம் பேச்சு மற்றவர்களை ஆற்றும்படியாக, தேற்றும்படியாக, மருந்தாக இருக்க வேண்டும். ஞானமுள்ளவர்கள் பேசவேண்டிய நேரத்தில் பேசுவார்கள். மற்ற நேரங்களில் தங்கள் மனதை அடக்கி அமைதியாக இருப்பார்கள்.

சிலர் மற்றவர்களை உண்மையாகப் பாராட்டாமல், பொய்யாகப் புகழ்ந்து பேசுவார்கள். உண்மையற்ற ஒன்றை உண்மையென நம்ப வைப்பார்கள். சிலர் மிகவும் இனிமையாகப் பேசுவார்கள். ஆனால், அவர்களுடைய இருதயம் வஞ்சகத்தால் நிறைந்திருக்கும். அப்படிப்பட்டவர்கள் பேசும் வார்த்தைகளை நம்பி ஏமாந்து போகாதீர்கள். சிலர் மிகைப்படுத்தி பேசுவார்கள்.

கட்டுப்படுத்த முடியாத மற்றும் நேர்மையற்ற, ஏமாற்றும் மனதை உடையவர்கள் நன்மையை பெற்றுக்கொள்ள மாட்டார்கள். குறிப்பாக பொருளாதாரத்தில் வளமுடன் இருக்க மாட்டார்கள். பொய் சொல்லுகிறவர்கள் மன கலக்கத்தோடு இருப்பார்கள், துன்பத்திற்குள்ளாவார்கள்.

சிலர் எப்பொழுதும் பெருமை பேசிக்கொண்டே இருப்பார்கள். தங்களைக்குறித்தும், தங்கள் குடும்பத்தைக் குறித்தும், தங்கள் இனத்தைக் குறித்தும், தங்கள் பிள்ளைகளைக் குறித்தும், வேலையைக் குறித்தும் பெருமை பேசிக்கொண்டே இருப்பார்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ மிகுந்த கிருபையளிக்கிறார். நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவை களைப் பேசும். நம் படிப்பு, வேலை, அறிவு, குடும்பம், பணம், வசதிகள் எல்லாம் கர்த்தர் நமக்கு கொடுத்தவை என்று நினைத்துப் பார்க்க வேண்டும். நம்மைப்பற்றி நாமே புகழ்ந்து பேசக் கூடாது. உன் வாய் அல்ல, புறத்தியானே உன்னைப் புகழட்டும்; உன் உதடு அல்ல, அந்நியனே உன்னைப் புகழட்டும் (நீதிமொழிகள் 27:2).

சிலர், நியாயத்தை மற்றவர்கள் எடுத்துச் சொல்லும்போது, அதைக் கேட்க மனதில்லாமல் சத்தத்தை உயர்த்தி, அவர்களைப் பேசவிடாமல், கத்துவார்கள். அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்றுகூட கேட்க மாட்டார்கள். தங்களை நியாயப்படுத்தி பேசிக் கொண்டிருப் பார்கள். பிரியமானவர்களே, நம்மிடம் உள்ள குறைகளை மற்றவர்கள் எடுத்துச் சொல்லும்போது வீணாக கத்தாமல் , வாதாடாமல், கோபப்படாமல், அமைதியாக கேட்டு நம்மை சரி செய்துகொள்ள வேண்டும்.

சிலர் தாங்கள் மிகவும் நல்லவர்கள் என்றும், அவர்கள் செய்த நல்ல காரியங்களையும், தங்களுடைய ஞானத்தின்படி, சுயமாக யோசித்து பேசிக் கொண்டிருப்பார்கள். கர்த்தருடைய வேதத்தின் வார்த்தையை பேசமாட்டார் கள். இவர்கள் சுய நீதியை உடையவர்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பட்டு இரட்சிப்பை பெற்றுக் கொண்டவர்களே தேவ நீதியை உடையவர்கள்.

சிலர் எப்பொழுதும் பணத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள். ஏனென்றால், அவர்களுடைய சிந்தனை களெல்லாம் எப்படி பணத்தை சேர்ப்பது என்பதைக்குறித்தே இருக்கும். சிலர், தவறு செய்பவர்களை நல்லவர்கள் என்றும், நல்லவர்களை தீயவர்கள் என்றும் பேசிக்கொண்டிருப்பார்கள். இவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் (நீதிமொழிகள் 17:15). தவறு செய்பவர்களை நியாயப்படுத்தி பேசுவதையும், தவறு செய்யாத நீதிமான்களை கண்டித்து பேசுவதையும் கர்த்தர் வெறுக்கிறார்.

<u>கட்டுப்படுத்த கடினமான நாவு</u>

நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது (யாக்கோபு 3:6). நம் சரீரத்தில் நாக்கு மிகவும் சிறியதாக இருக்கிறது. ஒரு சிறிய நெருப்புப் பொறி முழு காட்டையே எரித்துவிட முடியும். நாக்கும் நெருப்புப் பொறியாக இருக்கிறது. நாம் பேசும் அவிசுவாச வார்த்தைகள், நம்மையே அழித்துவிடும். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்(நீதிமொழிகள் 18:21). நம் நாவால் மரணம் அல்லது வாழ்வு நேரும்படியாகப் பேசமுடியும். தீமையானவைகளைப் பேசுகிறவர்கள், பேசின வார்த்தைகளின் பலனைப் பெறுவார்கள். அழிவைப்பற்றிப் பேசும்போது, அழிவைப் பெறுவார்கள். நன்மையானவைகளைப் பேசும்போது, நன்மையையே பெறுவார்கள். நாவு மிகவும் பொல்லாததாய் இருக்கிறது. கட்டுப்படுத்த முடியாத நாவு, பயங்கரமான சேதத்தை உண்டாக்குகிறது. சாத்தான், நாவின் வார்த்தைகளினால் ஜனங்களுக்குள் பிரிவினை உண்டாக்குகிறான். ஒருவரை, மற்றொருவரோடு மோதவிட்டு பார்க்கிறான். கடுமையான, வெறுப்புக் குரிய வார்த்தைகள், மற்றவர்களை பாதித்து, அவர்களுடைய நிம்மதியை குலைத்து போடுகிறது. பேசினது, பேசினதுதான். பேசினதின் காரணமாக வரும் பின் விளைவை யாராலும் தடுக்க முடியாது. நாம் கோபத்தில், கவனக் குறைவோடு, துணிந்து, வார்த்தைகளை கொட்டி விடுகிறோம். பின்னர் மன்னிப்பை கேட்டாலும், நாம் பேசின வார்த்தைகள், மற்றவர்களுடைய மனதை காயப்படுத்தி விடும். அந்த காயத்தின் தழும்புகள் அப்படியே இருக்கும். கோபத்தில் பேசின சில வார்த்தைகள், உறவை முறித்து விடுகிறது. மறுபடியும் அந்த உறவை ஏற்படுத்த பல வருடங்கள் ஆகும். வார்த்தைகள் நெருப்பைப் போன்றது என்பதை பேசுவதற்கு முன்பு ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். நீங்கள், உங்களுடைய நாவை கட்டுப்படுத்த வில்லையென்றால், அது அழிவை உண்டாக்கும். உன் நாவை பொல்லாப்புக்கு விலக்கிக் காத்துக்கொள் (சங்கீதம் 34:13). நாம், தீமையான, அழிவை உண்டாக்கும் வார்த்தைகளைப் பேசக்கூடாது.

நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்: ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனும், தன் முழு சரீரத்தையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக்கூடிய வனுமாயிருக்கிறான் (யாக்கோபு 3:2). நாம் எல்லோரும் பல தவறுகளைச் செய்கிறோம். ஒருவன் எப்பொழுதும் தவறாகப் பேசாதவனாக இருந்தால், அவன் முழுமையான மனிதனாகிறான்.

அவன், தன் முழு சரீரத்தையும் கட்டுப்படுத்தும் வல்லமையை பெற்றவனாகிறான். நாம், குதிரைகளை அடக்க வேண்டுமானால், அவற்றின் வாயிலே கடிவாளம் போட்டு, அதின் முழு சரீரத்தையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறோம். அதுபோலத்தான், கப்பல்களும் மிகவும் பெரியவைகளாக இருந்தாலும், பெருங் காற்றில் அடிபட்டாலும், அவைகளை ஓட்டுகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ, அவ்விடத்திற்கு நேராக சிறிய சுக்கானாலே திருப்பப்படும். ஆனால், சிறு சுக்கான் அந்த முழு கப்பலையும் இயக்கப் பயன்படுகிறது. நமது நாக்கும் அப்படித்தான், இது நமது சரீரத்தில் சிறிய உறுப்பு. இதுதான் நமது எண்ணங்கள், நினைவுகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்துகிறது. பெருமை பேசுகிறது. கோள்மூட்டி, சண்டையை தூண்டி விடுகிறது. மற்றவர்களை சபிக்கிறது. தீமையானவற்றைப் பேசுகிறது.

நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினால் சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரனே அப்படியிருக்க லாகாது *(யாக்கோபு 3:8-10)*. நாம், சில நேரங்களில் தேவனை பிரியப்படுத்துகிற வார்த்தைகளை பேசுகிறவர்களாக இருக்கிறோம். வேறு நேரத்தில், வன்முறையையும், அழிவையும் உண்டாக்குகிற வார்த்தைகளையும் பேசுகிறோம். தேவனைத் துதிக்கும் நாவினால் நாம் யாரையும் சபிக்காதிருப்போம். தேவன், மனுஷனை அவருடைய சாயலாக சிருஷ்டித்தார். எல்லா மனுஷரின் பாவங்களுக்காகவும் மரித்திருக்கிறார். அவரது பார்வையில் நாம் ஒவ்வொருவரும் மதிப்புள்ளவர்கள். ஆதலால் அவரைப்போல உண்டாக்கப்பட்ட மனுஷனை அற்பமாக எண்ணாதிருப்போம். அவர்களை நேசிப்போம். அப்படி நேசித்தால், சபிக்க மாட்டோம். தேவனுடைய சாயலை உடையவர்களாகிய நம்மில் அவருடைய குண நலன்கள் பிரதிபலிக்க வேண்டும். இரக்கமுள்ளவர்களாக இருப்போம். நாம், நம்முடைய வாயின் வார்த்தைகளை கட்டுப்படுத்துவோம். நம்முடைய சுய முயற்சியினால் முடியாது. பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் மட்டுமே நம் நாவை கட்டுப்படுத்த முடியும். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது, கட்டுப்பாட்டோடு இருப்போம். பரிசுத்த ஆவியானவர், நாம் பேசும் வார்த்தைகளை கவனித்து பேசவும், கட்டுப்படுத்தவும் உதவி செய்வார். நாம், ஆவியானவரின் பெலத்தை பெற்றுக் கொள்வோம். தேவனுக்கு பிரியமான வார்த்தைகளையே பேசுவோம்.

மனிதர்களாகிய நாம் உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகளையுடையவர்கள். நமது சந்தோஷத்தையும், துக்கத்தையும், உற்சாகத்தையும் வார்த்தையினாலே வெளிப்படுத்துகிறோம். உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது மிகவும் அரிது. மற்றவர்கள் நம்மை கோபப்படுத்தும் போது, நமது கோபத்தை அடக்கியிருப்பது என்பது அரிதாகும். நமது கோபம் மனிதனின் கட்டுப்பாட்டையும் மீறிவிடும். அப்போது உணர்ச்சிவசப் பட்டு கோபத்தோடு பேசிவிடுகிறோம்.

ஒரு சகோதரன், வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் முயற்சி செய்த எல்லாக் காரியங்களும் தோல்வியாக முடிந்தது. வெற்றி



என்பதையே அவரால் காண முடியவில்லை. அதனால் விரக்தியுற்று அவ நம்பிக்கையோடு பேச ஆரம்பித்தார். அவரது பேச்சு முழுவதுமே அவநம்பிக்கையுள்ளதாயிருக்கும். வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளினிமித்தம் மரணத்தைக்குறித்தே பேசிக்கொண்டிருப்பார். அவரது ஆயுசு நாட்களை அவரது நாவே குறைத்துப் போடுகிறது. நாம் வேதத்தைப் படித்து, வேதம் நம்மைக்குறித்து என்ன சொல்லுகிறதோ அதையே சொல்ல வேண்டும். கர்த்தருக்கு பயந்து, வேத வார்த்தையின்படி நடக்கும்போது, நம் ஆயுசு நாட்கள் பெருகும். வேத வார்த்தைகளையே பேசுவோம்.

சில பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை அவ நம்பிக்கையான,



அவிசுவாசமான வார்த்தைகளை பயன்படுத்தி கோபத்தோடு பேசுவார்கள். மற்றும் சில பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை, லூசு, மிருகம், எருமை மாடு, முட்டாள், என்றும், நீ உருப்படமாட்டாய், நீ வாழ்க்கை யில் முன்னேற மாட்டாய், என்றும் சர்வ சாதாரணமாக சத்தம் போடுவார்கள். நாம் என்ன பேசுகிறோமோ, அதுதான் அவர்களுடைய வாழ்க்கையில் நடக்கும். ஆசீர்வாதமான பிள்ளைகள்கூட இந்த வார்த்தைகளினாலே சபிக்கப்பட்டு போவார்கள். நாம் கோபத்தில் வார்த்தைகளை பேசிவிடலாம். நாம் பேசின வார்த்தைகளை திரும்பப் பெறமுடியாது. பிரியமானவர்களே, நாமே நம் பிள்ளைகளை சபித்து விடுகிறோம். பேசும்முன்பதாக யோசித்து, கவனமாகப் பேசுவோம். விசுவாச வார்த்தைகளை பேசுவோம். பிள்ளைகள், பரீட்சையில் குறைந்த மதிப்பெண்கள் வாங்கினாலும், எதிர்மறையான வார்த்தைகளைப் பேசாமல், கவனமாக, நன்றாகப் படி, அடுத்த முறை நல்ல மதிப்பெண்கள் வாங்க வேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களிடம் அவிசுவாசமாகப் பேசி, சோர்ந்துபோகச் செய்யக் கூடாது. உன்னால் மதிப்பெண்கள் வாங்க முடியாது என்று சொன்னால், அந்த பிள்ளையின் மனதிலும் நம்மால் நன்றாக படிக்க முடியாது என்று நினைத்து, தாழ்வு மனப்பான்மைக்குள் போய்விடுவார்கள். உன்னால் முடியும், நல்ல மதிப்பெண்கள் வாங்குவாய் என்று அவர்களை உற்சாகப்படுத்தும்போது, அவர்களுக்குள், நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை வந்துவிடும். உற்சாகத்தோடு படிப்பார்கள். தவறு செய்யும்போதும் அளவாகக்



கண்டித்து, வேத வார்த்தையைக் கற்றுக் கொடுத்து, கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளர்க்க வேண்டும். அவர்களை கோபப்படுத்தக் கூடாது. அப்பொழுது பெற்றோருக்கு கீழ்ப்படிவார்கள். சந்தோஷத்தோடு இருப்பார்கள். பெற்றோரிடம் பிள்ளைகளுக்கு இருக்கும் பயமும் போய்விடும்.

கர்த்தருடைய ஞானம், அவருடைய வார்த்தையில் இருக்கிறது. அவருடைய வார்த்தை, நம்முடைய இருதயத்திற்கு சத்தியத்தையும், வாக்குத்தத்தங்களையும் கொண்டுவந்து போதிக்கிறது. அவை நம்முடைய நாவின் பேச்சை சீர்படுத்துகிறது. அப்படிப்பட்ட சீர்படுத்தப்பட்ட பேச்சு, நமக்கு சுகத்தையும், மற்ற மனிதர்களுடனான நமது உறவுகளில் இனிமையையும் கொண்டு வருகின்றது. நமது அனுதின வாழ்க்கையை வெற்றிகரமானதாக்குகின்றது. கர்த்தருடைய வார்த்தையை நாம் பேசும்போது அது கேட்பவர்களின் மனதிற்கு இனிமையைத் தரும். உடலில் சுகத்தையும், ஆரோக்கியத்தையும் தரும்.

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் (மத்தேயு 12:36). நாம் பேசும் வார்த்தைகளை வைத்தே நம் குணத்தை மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள். நாம் பேசும் வார்த்தைகளே நம்முடைய இருதயத்தில் இருப்பதை வெளிப்படுத்துகிறது. நம்முடைய இருதயத்தில் பொல்லாத காரியங்கள் நிறைந்திருந்தால் நாம் நல்ல வார்த்தைகளை பேச முடியாது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். தீமையான காரியங்கள் நம் இருதயத்தில் இருந்தால் நாம் தீமையானவைகளையே சிந்திப்போம், தீமையானவைகளையே பேசுவோம். பேச்சு மாய்மாலமாய் (நடிப்பு) இருக்கும். நம் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் எப்படிப்பட்டதாயிருக்கின்றது? பாவங்களைக்குறித்து சிந்திக்கும்போதே நாம் தீட்டுப்படுகிறோம். ஒரு சிறு எண்ணத்தில்தான் பாவம் ஆரம்பமாகிறது. இருதயத்தின் எண்ணங்களில் தூய்மையாய் இருந்தால், நம் சொற்களும், செயல்களும் தூய்மையாய் இருக்கும். நம் எண்ணங்களில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது (ஆதியாகமம் 8:21). மனுஷனுடைய இருதயத்தை யாராலும் அறிந்துகொள்ள முடியாது. கர்த்தரே அதை அறிந்து வைத்திருக்கிறார். அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும், அவர்கள் உதடுகள் தீவினையைப் பேசும் (நீதிமொழிகள் 24:2). பொல்லாத மனிதர்கள் தங்கள் மனதில் தீமை செய்ய நினைக்கிறார்கள். அவர்கள் மனதில் இரக்கமில்லாமல், நேர்மையற்ற செயலை செய்யும் நோக்கத்துடன் சதித் திட்டமிடுகிறார்கள். வன்முறை செயலை செய்ய புதிய வழிமுறையை கண்டுபிடிக்கிறார்கள். துன்பத்தையும், மனக் கலக்கத்தையும் உண்டுபண்ணும் வார்த்தைகளையே பேசுவார்கள்.

வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில் இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும் (மத்தேயு 15:18, 19). நாம் பாவங்களை அறிக்கையிட்டு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படும்போது, நம் இருதயம் பரிசுத்தமாகிறது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கர்த்தரிடத்திலிருந்து கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம் இருதயத்தில் வந்து வாசம் செய்வார் (1 கொரிந்தியர் 3:16).

அப்பொழுது நம் எண்ணங்கள், குறிக்கோள்கள் (மனப்பான்மை) மாறுகிறது. நம் பேச்சும் மாறுகிறது. அவர் நமக்கு செம்மையான வழிகளை கற்றுக் கொடுப்பார். நாம் இயேசு கிறிஸ்துவைப்போல அன்பை வெளிப்படுத்தும் வார்த்தைகளைப் பேசுவோம். பரிசுத்த ஆவியானவர், வேதத்தின் வார்த்தைகளை நமக்கு போதித்து (1 யோவான் 2:27). அதன்படி நடத்துவார். நமது நோக்கம், சிந்தனை, பேச்சு எல்லாம் புதிதாய் மாறும். புது மனுஷனாய், புது மனுஷியாய் நாம் மாறிப் போவோம். அதன் அடையாளம், நல்ல வார்த்தைகளைப் பேசும் நமது நாவுதான்.

என் வார்த்தைகளும், எண்ணங்களும் உமக்கு ஏற்றதாய் இருக்கட்டும் என்று தாவீது ராஜா ஜெபிக்கிறான். நாமும் இப்படியாக ஜெபிப்போம். கர்த்தர் நம்மை ஆளுகை செய்ய ஒப்புக்கொடுப்போம்.

### கட்டுப்பாடுள்ள நாவு

அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான். விவேகி குளிர்ந்த மனதுள்ளவன் (நீதிமொழிகள் 17:27). கட்டுப்பாட்டோடு பேசுபவர்கள், பேசுவதற்குமுன்பு நன்கு யோசித்துவிட்டு பின்பு பேசுவார்கள். எப்பொழுது பேசவேண்டும், எப்பொழுது அமைதியாய் இருக்க வேண்டும் என்பதை அறிந்து வைத்திருப்பார்கள். எதை பேச வேண்டும், எதை பேசக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாய் இருப்பார்கள். இவர்களது பேச்சு அளவாய் இருக்கும். அதிகமாக பேச மாட்டார்கள். கலந்துரையாடும்போது, இவர்களது முறை வரும்வரை பொறுமையோடு காத்திருப்பார்கள். எளிதில் கோபமடைய மாட்டார்கள். யார் பேசும்போதும், இடையில் குறுக்கிட்டு பேச மாட்டார்கள். மற்றவர்கள் பேசுவதை கவனமாகக் கேட்பார்கள். மற்றவர்கள் பேசும் காரியத்தையும், பேசும் விதத்தையும் நன்கு கவனித்து நிதானிப்பார்கள். கேட்பவர்களின் புரிந்துகொள்ளும் திறனுக்கேற்ப யோசித்து பேசுவார்கள். இவர்களிடத்தில் அவசரம் மற்றும் பதட்டம் இருக்காது. ஞானமாய் பேசுவார்கள். எந்த நோக்கத்திற்காக பேசுகிறார்கள் என்பதில் மிகவும் கவனமாய் இருப்பார்கள். யார் இவர்களிடம் பேசினாலும், அவர்கள் பேசி முடிக்கும்வரை பொறுமையோடு கேட்டு, அவர்கள் பேசி முடித்த பின்னரே, இவர்கள் பதில் பேசுவார்கள். யார் எதை பேசினாலும் அவர்கள் பேசும்போதே இன்ன காரியத்தைத்தான் பேசுகிறார்கள் என்று முன்கூட்டியே தாங்களாகவே அனுமானிக்க மாட்டார்கள். இவர்களது பேச்சில் நிதானம் இருக்கும்.

கட்டுப்பாடுள்ள நாவையுடையவர்கள், பெருமை பேசமாட்டார்கள். மற்றவர்களை பரியாசம் செய்யமாட்டார்கள். சண்டை போடமாட்டார்கள். புறங்கூற மாட்டார்கள். கோள் சொல்லி இரண்டு பேருக்குள் சண்டையை உண்டாக்க மாட்டார்கள். பொய் பேசமாட்டார்கள். மற்றவர்களை சபிக்கமாட்டார்கள். மிகைப்படுத்தி பேசமாட்டார்கள். ஒருவரைப்பற்றி மற்றவரிடம் தவறாக பேச மாட்டார்கள். அவதூறு பேச மாட்டார்கள். இவர்கள் உண்மையையே பேசுவார்கள்.

பிறர் தவறு செய்யும்போது, நாம் அவர்கள் செய்த தவறை நேரிடையாக எடுத்து சொல்ல வேண்டும். அப்படி உண்மையை சொன்னால், அவர்கள் மனது காயப்படும், அவர்களுடைய உறவு முறிந்து விடும் என்று பயந்து உண்மையை மாற்றி சொல்லக் கூடாது. வார்த்தைகளில் எச்சரிக்கையோடு இருப்பவர்கள், தங்களுக்கு வரவிருக்கும் பேரிடருக்கு விலக்கிக் காத்துக் கொள்வார்கள்.

சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்துவிடுகிறது போலிருக்கும்; ஆதலால் விவாதம் எழும்பும்முன் அதை விட்டுவிடு (நீதிமொழிகள் 17:14). பெரிய அணையில் துவாரம் ஏற்பட்டால் எப்படியிருக்குமோ அப்படியே சண்டையின் ஆரம்பமும் இருக்கும். அந்த துவாரம் மிகப் பெரிதாக ஆவதற்குள் அதை அடைக்க வேண்டும். அப்படியே விவாதம் பெரிதாகி சண்டை முற்றுவதற்குள் விவாதத்தை நிறுத்த வேண்டும்.



ஞானமுள்ளவர்கள், பதிலுக்கு பதில் பேச மாட்டார்கள். அமைதலாய் இருப்பார்கள். கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான் (நீதிமொழிகள் 15:18).

<u>கவனமுள்ள நாவு</u>

நீதிமான்களுடைய உதடுகள் பிரியமானவைகளை பேச அறியும்; துன்மார்க்கனுடைய வாயோ மாறுபாடுள்ளது (நீதிமொழிகள் 10:32). கவனமுள்ள நாவையுடையவர்கள் உண்மையையே பேசுவார்கள். அதே நேரத்தில் நம்பிக்கை அளிக்கக்கூடிய வார்த்தைகளையே பேசுவார்கள். சரியான நேரத்தில், சரியான வார்த்தைகளைப் பேசுவார்கள். மற்றவர்களுக்கு ஆதரவாக, ஊக்கமளிக்கும் வார்த்தைகளையே பேசுவார்கள். இவர்கள் தாங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் தெரிவு செய்து ஞானமுள்ள வார்த்தைகளையே பேசுவார்கள். மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி, தெளிவாகப் பேசுவார்கள். தாங்கள் பேசும் காரியத்தையும், யாரோடு பேசுகிறார்களோ அவர்களைப்பற்றியும் மிகவும் கவனமாய் இருப்பார்கள். நேரிலோ அல்லது தொலைபேசியிலோ பேசும்போது, இவர்கள் பேசும் காரியம் மற்றவர்களுக்கு விளங்கியதா அல்லது புரிந்து கொண்டார்களா என்பதை கேட்டு உறுதிசெய்து கொள்வார்கள். இவர்கள் மிகவும் எச்சரிக்கையுடனும், ஜாக்கிரதையுடனும் பேசுவார்கள். தொல்லை உண்டாக்கும் காரியங்களை பேச மாட்டார்கள். எந்த காரியத்தைக்குறித்தும் பேசுவதற்கு முன்பு, எதை முதலாவதும், எதை இரண்டாவதும், மூன்றாவதுமாகப் பேசவேண்டும் என்பதை தீர்மானித்து, அதன்பின்னர் பேசுவார்கள். தங்களது பேச்சை கேட்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். நீதிமானுடைய நாவு சுத்த வெள்ளி; துன்மார்க்கனுடைய மனம் அற்ப விலையும் பெறாது (நீதிமொழிகள் 10:20). நேர்மையுடன், தேவனுடைய வழியில் நடந்து, அவரோடுகூட ஐக்கியமாய் இருப்பவர்களின் நாவு அநேகரைப் போஷிக்கும். அவர்கள் பேசும் வார்த்தைகள் பலருக்கு உதவியாக, வழிகாட்டியாக, ஆலோசனை தருவதாக இருக்கும். இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும் (நீதிமொழிகள் 16:24). மகிழ்ச்சியான, ஆறுதல், நம்பிக்கை தரும் வார்த்தைகள் நம் உள்ளத்திற்குள்ளும், சரீரத்திற்குள்ளும் சென்று பெலத்தையும், சுகத்தையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தரும்.

கர்த்தரால் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட ஒரு ஊழியக்காரர், இயேசுவின் அன்பினையும், மனதுருக்கத்தையும்பற்றி பேசும்போது, கேட்போரின் மனதிற்குள் பெரியதொரு சந்தோஷமுண்டாகும். எப்படிப்பட்ட துக்கமான சூழ்நிலையாக இருந்தாலும், எனக்கு நிச்சயம் விடுதலை கிடைக்கும், எனக்கென்று என் தகப்பன் இயேசு கிறிஸ்து இருக்கிறார், அவர் என் சூழ்நிலையைக் காட்டிலும் பெரியவர், எனக்கு நிச்சயமாக அற்புதம் செய்வார் என்ற உணர்வு நமக்குள் ஏற்படும். அவர் பேச்சு, தேவனுடைய அன்பையும், மனதுருக்கத்தையும் கொண்டு வரும்.

<u>தீய நாவு</u>

தீய நாவை உடையவர்கள், சிந்திக்கும்முன்பே பேசுவார்கள். அவர்கள் பேசும் வார்த்தைகள் தவறான நோக்கத்தோடும், மற்றவர்களைப் பற்றியும், மற்றவர்களது அந்தரங்க வாழ்க்கையைப் பற்றியும்,வம்பாயும் பேசுவார்கள். உண்மையல்லாததும், ஒருவரது நற் பெயரைக் கெடுக்கும் நோக்கத்துடனும், உண்மையை மாற்றியும் பேசுவார்கள். கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப் போலிருக்கும்; ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும் (நீதிமொழிகள் 26:22). ஒரு சிறு துணிக்கை இனிப்பு வயிற்றுக்குள் போவதுபோல ஒருவரைப்பற்றி தவறாக பேசும் இரகசிய வார்த்தை, கேட்பவர்களின் உள்ளார்ந்த உறுப்புகளுக்குள் செல்லும். அவன் (துன்மார்க்கன்) இருதயத் திலே தீரியாவரமுண்டு; இடைவிடாமல் பொல்லாப்பைப் பிணைத்து வழக்குகளை உண்டு பண்ணு கிறான் (நீதிமொழிகள் 6:14). தாங்கள் நினைத்ததையும், தவறான காரியங்களையும் செய்பவர்கள் மன கலக்கத்தோடு இருப்பார்கள். அவர்கள் பாவம் செய்ய தங்கள் இருதயத்தில் திட்டம்போட்டு, அதை செயல்படுத்த முனைகின்றார்கள். அவர்கள் விரும்பியதை செய்யும் வல்லமை அவர்களுக்கு இருக்கின்றது. தவறான நோக்கம் நம்மை துன்பத்துக் குள்ளாக்கும். கர்த்தருக்கு பயந்து வாழும்போது, பெருமையையும், மற்றவர்களைவிட நம்மை பெரிதாக நினைப்பதையும், தீய வழிகளையும், பொய் சொல்லுவதையும் வெறுப்போம் (நீதிமொழிகள் 8:13). பேலியாளின் மகன் கிண்டி விடுகிறான்; எரிகிற அக்கினி போன்றது அவன் உதடுகளில் இருக்கிறது. மாறுபாடுள்ளவன் சண்டையை கிளப்பிவிடுகிறான்; கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான் (நீதிமொழிகள் 16:27, 28). தொல்லை உண்டாக்குபவன் பொய் செய்திகளை பரப்பி பிரச்சனைகளை உண்டாக்கி, நெருங்கிய நண்பர்களை பிரித்து விடுவான். தேவ பக்தியில்லாத, நற் பண்புகளில்லாத, பொல்லாத ஜனங்கள் தீய காரியங்களை செய்ய திட்டமிடுகிறார்கள். அவர்களது அறிவுரை நெருப்பைப் போன்று அழிக்கும். இவர்கள் உண்மையை புரட்டி பொய் கதை கட்டுவார்கள்.

<u>கவனக் குறைவுள்ள நாவு</u>

கவனக் குறைவுள்ள நாவை உடையவர்கள், ஒரு காரியத்தை உன்னிப்பாக நோக்கிப் பார்க்காமல், பேசிவிடுவார்கள். இவர்கள் பொய் பேசுவார்கள். மற்றவர்களை சபிப்பார்கள். எளிதாக கோபப்படுவார் கள். அப்படி கோபத்தோடு பேசும் வார்த்தைகள், அவர்களை அழிவுக்கு நேராகக் கொண்டு செல்லும். வன்முறையை கையாளுவார்கள்.

நீங்கள் அவனவன் தன்தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள். எந்தச் சகோதரனையும் நம்பாதிருங்கள்; எந்த சகோதரனும் மோசம் பண்ணுகிறான், எந்த சிநேகிதனும் தூற்றித் திரிகிறான். முதுகுக்கு பின்னால் பேசுவார்கள் யாரும் உண்மை பேசுவதில்லை. அவர்கள் மெய்யை பேசாமல் ஒவ்வொருவனும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள். பொய்யைப் பேச தங்கள் நாவை பழக்குகிறார்கள், அக்கிரமஞ்செய்ய உழைக்கிறார்கள் (எரேமியா 9:4,5). தேவன் பொய் பேசுவதை வெறுக்கிறார். தொடர்ந்து பொய் சொல்லும்போது, தவறு என்றே நமக்கு தெரியாமல் போய்விடுகிறது.

நாம் எப்படிப்பட்ட நாவையுடையவர்களாய் இருக்கிறோம்? நாம் கட்டுப்பாடுள்ள நாவையும், கவனமுள்ள நாவையுமுடைய வர்களாக இருக்க வேண்டும். தீய நாவையும், கவனக் குறைவுள்ள நாவையும் நம்மைவிட்டு அகற்றுவோம். நாவுக்கு கடிவாளம் போடுவோம். கட்டுப்பாட்டிற் குள் வைத்திருப்போம். பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து பேசுவோம். நல்ல வார்த்தைகளையே பேச வேண்டும் என்ற நோக்கத்தோடு இருப்போம். மற்றவர்களைப்பற்றி நல்லதையே பேசுவோம். மற்றவர்களின் குறைகளைப் பேசாதிருப்போம். மற்றவர்களின் நற் பெயரை கெடுக்கும்படியாக பேசாதிருப்போம். ஒருவரது முதுகுக்குப்பின் தவறாக பேசாதிருப்போம். தேவனுக்கு பிரியமில்லாதவற்றை பேசாதிருப்போம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களோடிருப்பதாக!

# தேவ சித்தம் 2

பாஸ்டர் ஜெர்மணி



ஒருவன், வயலின் வாசிப்பதில் நிபுணனாயிருக்கிறான். மற்றொருவன், கிட்டார் வாசிப்பதில் நிபுணனாயிருக்கிறான். இவைகளெல்லாம் தாலந்துகள். அவனவன் தான் செய்யும் வேலையில் நிபுணனாயிருக்கிறான். இவைகளெல்லாம் கர்த்தர் கொடுத்த தாலந்துகள். இந்த உலகத்திலிருந்து பெற்றுக்கொண்டவைகளல்ல. கர்ப்பத்திலே உருவாக்கும்போதே கர்த்தர் கொடுத்தது. அதை அவர்கள் பயிற்சி செய்வதின் மூலம் செம்மைப்படுத்திக் கொண்டார்கள். அதை வாய்க்கச் செய்ததும் (ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கினதும்) கர்த்தரே.

இவற்றிற்கெல்லாம் மேலானது, கர்த்தர் தரும் பரிசுத்த ஆவியின் வரங்கள். இவற்றை கர்த்தர் தந்தால்மாத்திரமே ஒரு மனுஷன் பெற்றுக்கொள்ள முடியும். கேட்டு பெற்றுக்கொள்ள முடியாதவை. கர்த்தர், கிருபையாய் கொடுத்தால்மாத்திரமே கிடைக்கும். நம்முடைய பணத்தை, மனிதர்களை, சூழ்நிலைகளை வைத்து நாம் ஊழியத்தை (நம் சொந்த முயற்சியினால், பலத்தினால்) ஏற்படுத்தலாம். ஆனால், பரிசுத்த ஆவியின் வரங்கள் இல்லையென்றால் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை.

பிரபலமான ஊழியர்களை, ஊழியங்களைப் பார்த்து நாம் பயப்படவோ, தாழ்வு மனப்பான்மை கொள்ளவோ தேவையில்லை. நம்முடைய அபிஷேகம், அழைப்பு, வரங்கள், வேத அறிவு இவற்றை சரியாக ஆராய்ந்து அறிந்து அவற்றிலே வளர்ந்தால் போதும். கர்த்தர் நம்மை செம்மையாகப் பயன்படுத்த முடியும். முக்கியமாக, வேதத்தை நன்கு படித்து, அதிலே தெளிவுபெற வேண்டும். இதுதான் நம்மை ஊழியத்தில் உயர்த்தும். விசேஷமாக, வெளிப்பாடுகள் உள்ள மனுஷனாக இருத்தல் அவசியம். தேவனுக்கும், தேவ மனுஷனுக்கும் உள்ளத் தொடர்பு இதிலே (வெளிப்பாட்டில்) விளங்கும். கர்த்தர், ஒரு மனுஷனோடு இருக்கிறார் என்பதை வெளிப்பாட்டின் மூலம் காண்பிப்பார்.

பிரசங்கிப்பதைக் காட்டிலும், ஊழியம் செய்வதைக் காட்டிலும், கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்து, அவரிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்வது முக்கியம். நாம் பேசுவது, உப்பாக, வெளிச்சமாக இருக்க வேண்டும். நமது ஆவி, அனலாக இருக்க வேண்டும்.

ஏற்கனவே கர்த்தர் கொடுத்ததை வைத்துக்கொண்டு கொஞ்ச காலம் ஊழியத்தை செய்யலாம். அதன்பின்னர், சோர்வு வந்துவிடும். பேசுவதில் அனல் இருக்காது. கேட்பவர்களுக்கு அது சோர்வைத் தரும். தொடர்ந்து தேவ சமுகத்தில் இல்லாததால், கர்த்தர் நம்மோடு இடைபட வெகு நேரம் பிடிக்கும். சுயமாக ஏதோ ஒன்றை சொல்லத் தோன்றும். கூட்டங்களின் எண்ணிக்கையைவிட கர்த்தருடைய சமுகத்தில் காத்திருப்பதே முக்கியம், அவசியம். வெளிப்பாடு என்பது, கர்த்தர், தமது சிந்தையையும், சித்தத்தையும், நமது சிந்தையையும், சித்தத்தையும் மற்றும் பிற காரியங்களையும் வெளிப்படுத்துவதாகும். கர்த்தரது சித்தத்திற்குள் மற்ற எல்லாக் காரியங்களும் அடங்கும்.

கர்த்தர், தமது சித்தத்தை, வேதம், தரிசனம், சொப்பனம், தீர்க்கதரிசனம், சூழ்நிலைகள் மூலம் வெளிப்படுத்துவார். எல்லாவற்றுக்கும் அஸ்திபாரம், வேதாகமமே. கர்த்தருடைய வேதத்தின் வார்த்தை இல்லாமல், கர்த்தருடைய சித்தம் வெளிப்படாது.

நல்ல முதிர்ந்த படிப்பும், அனுபவமும் உள்ள ஒருவர் எழுதின ஆராய்ச்சி புத்தகத்தை, சிறு பையனொருவன் படித்து விட்டு, அவர் இப்படி சொல்லுகிறார், அப்படி சொல்லுகிறார் என்று சொல்வது போலத்தான், வேதத்தை நன்கு படித்து தெரிந்துகொள்ளாதவர்கள் பேசுவதும். வேதத்தில் இன்னின்னக் காரியங்கள், இப்படி இப்படி இருக்கின்றது என்பதைத் தொடர்ந்து படித்து, தியானித்து சரியாகப் புரிந்துகொள்ளும்வரை, கர்த்தர் நமக்கு வேதத்தைத்தான் முதலில் கற்றுக் கொடுப்பார். அதற்குத்தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம். அதன்பிறகுதான் வேதத்திற்குள் மறைந்திருக்கும் இரகசியங்களை நம்மோடுகூட பரிசுத்த ஆவியானவர் இடைபட்டு, வெளிப்படுத்துவார். தனி மனிதனைப் பற்றி, குடும்பம், சமுதாயம், உலகம், எதிர் காலம், பரலோகம் மற்றும் தேவ இரகசியங்களை வெளிப்படுத்துவார்.

ஒருவன், கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவரால் வேதத்திலிருந்து எவ்வளவாய் போதிக்கப்படுகிறானோ, அவ்வளவாய் கர்த்தரால் பயன்படுத்தப்படுவான். இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தை நாம் எவ்வளவு பிரியமாய் தியானிக்கிறோமோ, அவ்வளவாய் கர்த்தரும் நம்மை வல்லமையாய் பயன்படுத்துவார். வேதத்தின்மீது தாகம் வேண்டும். வேதத்தை எவ்வளவுக்கெவ்வளவு புரிந்துகொள்கிறோமோ அவ்வளவு கர்த்தர் நம்மை பயன்படுத்துவார். வேதத்தின் ஆழம் ஊழியத்தின் உயரம்.

வேதம் என்பது ஒரு தகவல் புத்தகம் அல்ல. வேதம் என்பது வெளிப்பாடுகளின் புத்தகம். தேவ இரகசியங்களை, நம் அறிவிற்கு எட்டாதக் காரியங்களை, காலங்களுக்கு அப்பாற்பட்டக் காரியங்களை நமக்கு வெளிப்படுத்துகிற புத்தகம்.

நமக்கு தெரிந்ததெல்லாம் நேற்று மற்றும் இன்றுவரை நடந்த காரியங்கள் மாத்திரமே. நாளையைப்பற்றி நமக்குத் தெரியாது. அதை கர்த்தர்மாத்திரமே அறிவார். அதையும் நமக்கு சொல்ல அவர் விருப்பம் உள்ளவராக இருக்கிறார். தாம் செய்ய விரும்பும் காரியத்தை மனுஷனுக்கு சொல்லுகிறார். இதுவே தீர்க்கதரிசனம். கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்? (ஆமோஸ் 3:7,8).

வேதத்தின் வார்த்தைகள் முதலாவது வெளிப்படுத்துவது, பொதுவான தேவ சித்தத்தை. அடுத்து, வேதத்தின் வார்த்தையில் மறைந்திருக்கிற நமக்குள்ள குறிப்பிட்ட சூழ்நிலைக்கான தேவ சித்தத்தை பரிசுத்த ஆவியானவர்

வெளிப்படுத்துவார். இது குறிப்பான தேவ சித்தமாகும்.

கர்த்தர், அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு, மேலான ஆசீர்வாதங்களை(பூலோக ஆசீர்வாதங்கள், பரலோக ஆசீர்வாதங்கள்) வைத்திருக்கிறார். நாம் அதைக் கேட்டு பெற்றுக்கொள்ள விரும்புகிறார். அவற்றை வெளிப்படுத்துவதே தேவ சித்தமாகும். நமக்கு முன்பாக மரணத்தை தரும் காரியங்களுமுண்டு, ஜீவனைத் தரும் காரியங்களுமுண்டு. அதேபோல, நமக்கு முன்பாக (இந்த உலகத்தில்) நன்மையைத் தரும் காரியங்களுமுண்டு, தீமையைத் தரும் காரியங்களுமுண்டு. இவற்றில் எது ஜீவனையும், நன்மையையும் தரும் காரியங்கள் என்பதை வெளிப்படுத்துவதே தேவ சித்தமாகும்.

நமது சுய அறிவினால், ஞானத்தினால், அனுபவத்தினால், தேவசித்தத்தை அறிந்துகொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவரே, தேவ சித்தத்தை வெளிப்படுத்த முடியும்.

நமது மாம்சத்தின்படி நடக்காமல் இருக்க உதவுவதே தேவ சித்தம். நமது மாம்சமும், ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமானது. மாம்சம் விரும்பினதைச் செய்யும்போது (இச்சை) அது நம்மை மரணத்தில் கொண்டுபோய் விட்டுவிடும் (ரோமர் 6:23). நமது ஆவிக்குரிய விருப்பத்தை நிறைவேற்றுவதே தேவ சித்தமாகும் (ரோமர் 5:21).

கர்த்தர், நம்மை தேவ தூதர்களைப் போலப் பணிவிடை ஆவிகளாகப் பயன்படுத்துவதில்லை (எபிரெயர் 1:14). தேவ தூதர்கள், கர்த்தர் என்ன சொல்லுகிறாரோ அதைமாத்திரம் செய்வார்கள். தாங்களாக ஒரு காரியத்தை செய்ய அவர்களுக்கு அனுமதி இல்லை. ஆனால், மனிதர்களாகிய நமக்கோ கர்த்தர் சுயாதீனத்தைக் கொடுத்திருக்கிறார். நாமாக, சுயமாக, நமது விருப்பம்போல எதை வேண்டுமானாலும் செய்யலாம். கர்த்தர், நம்மை ஒரு அடிமையைப்போலவோ, வேலைக்காரனைப்போலவோ வைக்கவில்லை. இதை வேதத்தில், யாக்கோபு 1:25, 2:12,13, 1 பேதுரு 2:16, கலாத்தியர் 5:13-ல் காணலாம். நாம் அழிவிற்கு நேராக நடந்துவிடாதபடி தடுப்பதே தேவ சித்தப்படி நடப்பதாகும்.

நாம், தேவனுடைய சித்தத்தை அறிந்து அதின்படி நடக்கும்போது, குழப்பம், பயம், இரு மனம், சந்தேகம் இருக்காது. நமக்குள் உறுதி, தைரியம், தெளிவு இருக்கும்.

குருட்டு நம்பிக்கைக்கு எதிரானது தேவ சித்தமாகும். சிலர், கர்த்தர் எனக்கு எல்லாவற்றையும் செய்து தருவார் என்று தைரியமாகச் சொல்வார்கள். ஆனால், திடீரென்று அவர்கள் வாழ்க்கையில் ஒரு நெருக்கடி வரும்போது, புலம்புவார்கள். அவர்களுடைய உறுதி, தைரியம் எங்கே போனது ? அந்த உறுதியும், தைரியமும் குருட்டுத்தனமாக, அவர்களாகவே கர்த்தர் செய்வார் என்று நம்பினது ஆகும். அவர்கள் வேதத்தை படிக்கவோ, இயேசுவின் சிந்தையையோ, சித்தத்தையோ அறிந்து கொள்ளவில்லை. வேதத்தை தொடர்ந்து படித்து, ஜெபத்தில் தரித்திருந்து, தாகத்தோடு தேவ சித்தத்தைத் தேடுபவனுக்கே கர்த்தர், தமது சித்தத்தை வெளிப்படுத்துவார்.

தேவ சித்தத்தின்படி நடக்கும்போது சமாதானம் இருக்கும் (கொலோசெயர் 3:15, பிலிப்பியர் 4:6,7). இதுதான் தேவ சித்தத்தில் பிரதானமான காரியமாகும். ஒரு காரியத்தை செய்யலாமா? வேண்டாமா? இதில் எது தேவ சித்தம் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமானால், அந்தக் காரியத்தை செய்யலாமென்று நினைக்கும்போதே நமக்குள் சமாதானம் வருகின்றதா என்று பார்க்க வேண்டும். சமாதானமாக இருந்தால், அது தேவ சித்தமாகும். சமாதானமாக இல்லாமல் இருந்தால், அது தேவ சித்தமல்ல. நம் பரம தகப்பன், சமாதானத்தின் தேவன், சமாதானப் பிரபு, சமாதானத்தின் காரணர். அதனால், அவரது சித்தப்படி நாம் ஒரு காரியத்தை செய்யும்போது, அது நமக்கு சமாதானத்தைத் தருவதாகவே இருக்கும்.

தேவ சித்தப்படி நாம் நடக்கும்போது, தேவனே எல்லாவற்றையும் பொறுப்பெடுத்து நடத்தித் தருவார். நாம் எதைக் குறித்தும் பயப்படவோ, கவலைப்படவோத் தேவையில்லை. எல்லாம் பரிபூரணமாய் இருக்கும். ஏனென்றால், அவர், பரிபூரணமுள்ள தேவன், சம்பூரணமுள்ள தேவன், குறைவுகளை நிறைவாக்குகிற தேவன். தேவ சித்தத்தின்படி நாம் நடக்கும் போதுமாத்திரமே, கர்த்தர் செய்யும் அற்புதங்களையும், அதிசயங்களையும் காண முடியும், பெற முடியும். நாமாக சுயமாக நடக்கும்போது, கர்த்தர் நமக்கு எதையும் செய்ய முடியாது. அவரிடம் கேட்டு, அவருடைய சித்தத்தைத் தெரிந்துகொண்டு, அதின்படி நடக்கும்போது, நம்முடைய எல்லாக் காரியங்களையும் அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார். நம்கூடவே இருப்பார். நமது காரியத்தின் தொடக்கம் முதல் முடிவுவரை, அவர் நம்கூடவே இருப்பார். அவரே எல்லாவற்றையும் செய்து தருவார்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

ஜெப தேவைக்கும்
தேவ ஆலோசனைக்கும்

**+ 91 - 44 - 22353500**
**+ 91 - 9940667881**

www.kennedyministries.org

E-mail: nijakennedy@yahoo.com

